
மெய்ப்பொருள் காண்பதறிவு

"KALAA POOSHANAM"
K.S. SIVAGNANARAJAH
RETIRED VICE PRINCIPAL
ADIYAPATHAM ROAD
KOKUVIL WEST

# கொழும்புத் தமிழ்ச் சங்கம்



## பட்டயக் கற்கைநெறி
## பட்டமளிப்பு விழா
## 2014 - 2015

இல 7, சங்கம் ஒழுங்கை, கொழும்பு 06
தொலைபேசி இல :- 011 2363759
தொலைநகல் இல :- 011 2361381

மெய்ப்பொருள்
காண்பதறிவு

# கொழும்புத் தமிழ்ச் சங்கம்

## பட்டயக் கற்கைநெறி
## பட்டமளிப்பு விழாச் சிறப்பிதழ்
## 2014 - 2015

## 13.06.2015

# வாழ்த்துரை



செம்மொழியாகவும் புதுமையின் இயல்புகளைச் சூடிய நவீன மொழியாகவும் நீட்சி கொண்ட தமிழ் மொழி, உலக மொழிகளுள் ஒன்றாக ஏற்றம் பெற்றுள்ளது.

அத்தகைய எழுபுலத்தில் தமிழறிவை ஆழ்நிலையிலும் அகல்நிலையிலும் கற்பிப்பதற்குரிய கலைத்திட்ட ஏற்பாடுகளுடன் "தமிழ்ப்பட்டயக் கற்கை" நெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத் தமிழ்மொழிப் பாடத்திட்டங்கள், பண்டிதர் தேர்வுக்குரிய பாடத்திட்டங்கள் ஆகியவற்றைக் கருத்திலே கொண்டு பட்டயக் கல்விக்குரிய பாடத்திடடம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

பழந்தமிழ் இலக்கியங்கள் இடைக்கால இலக்கியங்கள் நவீன இலக்கியங்கள் என்ற அடுக்குகள் பாடத்திட்டத்திலே சேர்க்கப்பட்டுள்ளன. இலக்கணக் கல்வியும் மொழியியற் கல்வியும் திறனாய்வும் பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மரபு வழித் தமிழ்ப்புலமையாளரும் பல்கலைக்கழகத்தினரும் கற்பித்தலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இங்குள்ளோருக்கும், உலகத் தமிழர்களுக்கும் இது ஓர் உவகையூட்டும் செய்தி

பேராசிரியர் சபா.ஜெயராசா
புலமைக்குழுத் தலைவர்
தமிழ்ப் பட்டயக் கற்கைநெறி

# கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவரின் வாழ்த்துச் செய்தி



**கொ**ழும்புத் தமிழ்ச் சங்கத்தால் இரண்டாவது தடவையாக நடாத்தப்பெற்ற, தமிழ்ப் புலமை விருத்தியை நோக்கமாகக் கொண்ட "தமிழில் பட்டயச் சான்றிதழ் கற்கைநெறி" 2015ம் ஆண்டு பட்டமளிப்பு விழாவில் பட்டம்பெறும் அனைவரையும் மனமுவந்து வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்!

கொழும்புத் தமிழ்ச் சங்கம் அதன் கல்விக்குழுவின் ஊடாக தமிழ்க்கல்வி தொடர்பாக முன்னெடுத்த பல செயற்பாடுகளுள், கூடிய பயனும், பெருவெற்றியும் அமைந்ததாக இந்த தமிழ்ப்பட்டயச் சான்றிதழ்க் கற்கை நெறி அமைந்தமை பாராட்டுக்குரியது.

ஆசிரியர்கள், மாணவர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் எனப் பலதரப்பட்ட தமிழ் அறிவில் ஆர்வமுடையவர்கள் பலரும் வயது வித்தியாசமின்றி கடந்த ஒருவருடகாலமாக இக்கற்கை நெறியில் பங்குபற்றி இன்று பட்டம் பெறுகின்றார்கள் என்பது கவனத்திற்குரியது.

இக்கற்கை நெறியினை முன்னெடுத்த தகைசான்ற கல்வியாளர்களுக்கும், புலமைக் குழுத்தலைவராகச் செயற்பட்ட பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கட்கும், கற்கை நெறி அமைப்பாளராகப் பணியாற்றிய எமது கல்விக்குழுச் செயலாளர் திரு.மு.மனோகரன் அவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்!

மேலும் தமது தமிழ்ப்புலமையினாலும், மேலான தமிழிலக்கியப் பணியினாலும் இவ்வாண்டு 'தமிழ் நிதி' சிறப்பு விருது பெறும் அகவை நூறைத் தாண்டிய இணுவையம்பதி, "கலாபூஷணம்", "முதுபெரும் புலவர்" , "புலவர் மணி" திரு.வை.க.சிற்றம்பலம் அவர்களையும் பாராட்டுவதாலும் வாழ்த்துவதாலும் கொழும்புத் தமிழ்ச் சங்கம் இறும்பூதெய்துகிறது!

*எமது தமிழ்ச் சங்கத்தின் தமிழ்ப்பணி என்றும் தொடரட்டும்!*
*வாழ்க தமிழ்! வளர்க எம் பணி!!*

ஆ. இரகுபதிபாலஸ்ரீதரன்
தலைவர்

-KALAA POOS...
K.S.SIV...
RETIRED VICE PRINCIPAL
ADIYAPATHAM ROAD
KOKUVIL WEST

# பொதுச் செயலாளர் வாழ்த்துரை



**த**சாப்தங்கள் ஏழு தலைநகரில் தமிழையும், தமிழ் கலாசார, பண்பாட்டினையும் வளர்க்கப் பாடுபடும் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் ஒரு உன்னதச் செயற்பாடே தமிழ்ப் பட்டயக் கற்கை நெறியாகும்.

மரபுவழித் தமிழ் இலக்கியங்களோடு நவீன இலக்கியங் களையும் ஒருங்கமைத்த பாடத்திட்டத்தோடு நடாத்தப்படும் இப்பாடநெறி. ஆளுமைமிக்க கல்வியாளர்களை உருவாக்கும் என்பது நம்பிக்கைக் குரியதாகும்.

துறைசார்ந்த அறிஞர்களைக் கொண்டு நடத்தப்பெறும் இக்கற்கைநெறி. கற்கைத் தாகங் கொண்டோர்க்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

இம்முயற்சியில் அயராது உழைக்கும் கல்விக்குழுச் செயலாளர் திரு.மு.மனோகரன் பாராட்டுக்குரியவர். தொடர்ந்தும் இக் கற்கைநெறி தொடர வாழ்த்துகின்றேன்.

ஜின்னாஹ் ஷரிபுத்தீன்
பொதுச் செயலாளர்

# தொடரட்டும் தமிழ்ப்பணி



ஒரு மனிதனைப் பூரணமாக்குவதற்கு அவசியமான தேவைப்பாடுகளுள் முக்கியமானது மொழியாகும். மனிதனுக்குத தேவையான பல்வேறுவிதமான அறிவுகளையும் பெற்றுக்கொள்ளும் ஊடகமாகவும் மொழி திகழ்கிறது. இவ்வாறே எழுத்து, வாசிப்பு என்பவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு மொழியைக் கொள்ள முடியும். அட்சரங்களைச் சரியாக இனங்காண்பதிலிருந்து சரியான வசனங்களின் மூலம் கட்டுரைகளை உருவாக்குவது வரையான தேர்ச்சியை மொழியில் பெற்றுக் கொள்வதானது தனது ஆளுமையின் விருத்திக்கும் வழி வகுக்கும். கருத்துக்களை வெளியிடவும் ஆவணப்படுத்தப்படும் தமிழ்மொழி வகிக்கும் பங்கு எல்லையற்றது. இதற்காகவே தமிழ்ச் சான்றோர்களால் கொழும்புத் தமிழ்ச் சங்கம் உருவாக்கப்பட்டு தன்னாலான பணிகளைச் செய்து வருகின்றது. பல பணிகளுக்கப்பால் கடந்த ஒரு வருடமாக மேற்கொள்ளப்பட்ட தமிழ்ப்பட்டயச் சான்றிதழ் கற்கைநெறி இவற்றிற்கு மேலும் வலுச் சேர்க்கின்றது. தமிழ்ப்பட்டயச் சான்றிதழ் கற்கைநெறி தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்று இலங்கைப் பல்கலைக்கழகங்களால் வழங்கப்படும் பட்டங்களுக்கும் சமமானதாக இருக்கவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

"மலரட்டும் தாய் உள்ளம் சிறக்கட்டும் தமிழ் அன்னை வளரட்டும் நம் தமிழ்ப்பணி"

மு. மனோகரன்
கல்விப்பணிக்குழுச் செயலாளர்
கொழும்புத் தமிழ்ச் சங்கம்

# கொழும்புத் தமிழ்ச் சங்கச் சங்கத்தின் தமிழ்ப் பட்டயச்சான்றிதழ்க் கற்கைநெறி பற்றிய ஓர் அறிமுகம்

செம்மொழியாம் நம்தமிழ் மொழியின் தரம், படிப்படியாக வீழ்ச்சிகண்டு வருவது யாவரும் அறிந்ததே. இதனைப் பாடப் புத்தகங்களிலும், ஊடகங்களிலும் வெளிப்படையாகக் காணமுடிகிறது. இக்குறைபாட்டை நீக்குவதற்குக் கொழும்புத் தமிழ்ச் சங்கம் பலவழிகளில் முயன்று வருகிறது.

ஆசிரியர்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் பயன்படத்தக்கதாகவும், தமிழ்ப்பட்டயச் சான்றிதழ்க் கற்கைநெறி ஒன்றினை இச்சங்கம் 2014 தொடக்கம் நடத்தி வருகிறது.

☞ இக் கற்கைநெறி ஒரு ஆண்டுப்பாடத்தைக் கொண்டது

☞ 1) இது அடிப்படைத் தமிழ் இலக்கணம்
2) தொடர்பாடல் அடிப்படைகள்
3) பழந்தமிழ் இலக்கியங்கள்
4) இடைக்காலத் தமிழ் இலக்கியங்கள்
5) நவீன தமிழ் இலக்கியம்
6) சிறிய அளவிலான ஓர் ஆய்வறிக்கை

ஆகிய ஆறு பாடங்களைக் கொண்டது

☞ ஒவ்வொரு சனிக்கிழமையிலும் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

☞ துறைசார்ந்த பேராசிரியர்களும், தமிழ் அறிஞர்களும் விரிவுரையாளர்களாக வுள்ளனர்.

☞ விரிவுரையாளர்களால் தரப்படும் ஒப்படைகளை அவ்வப்போது செய்து கொடுக்கவேண்டும்.

☞ இறுதித் தேர்வில் சித்திபெறுவோர்க்குப் பட்டம் வழங்கப்படும் 80% வீதமான நாட்களுக்குக் குறையாமல் வகுப்புக்களுக்குச் சமுகந்தந்தோரே இறுதித் தேர்வில் பங்குபற்ற முடியும்.

☞ தேர்வு எழுத்துத் தேர்வாகவும், நேர்காணல் தேர்வாகவும் நடைபெறும். ஒப்படைகளுக்கும் புள்ளிகள் வழங்கப்படும்.

☞ 2015இல் பயின்ற இரண்டாவது அணியினர்க்கு யூன் மாதத்தில் பட்டமளிப்பு நடைபெறும்.

☞ புதிய அணியினர்க்குரிய வகுப்புக்கள் யூலாய் மாதத்தில் தொடங்கும்

☞ கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் கல்விக்குழுச் செயலாளர் இதற்கு இணைப் பாளராகவுள்ளார். கற்கவிரும்பும் எவரும் சங்கத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று உங்களைப் பதிவு செய்துகற்கலாம்.

☞ தமிழ் கற்க விரும்புவோரும், சிறப்பாக ஆசிரியர்களும், ஊடகவியலாளர்களும் இலவசமாக நடைபெறும். இந்தக் கற்கை நெறியைப் பயன்படுத்த முன்வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

# கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் "தமிழியல் ஆய்வு மையம்" பற்றிய ஓர் அறிமுகம்

**கொ**ழும்புத் தமிழ்ச் சங்கக் கல்விக்குழுவின் பரிந்துரைக்கேற்ப ஆட்சிக்குழு "தமிழியல் ஆய்வு மையம்" ஒன்றை ஆரம்பிக்க அனுமதியளித்தது. இந்த ஆய்வுமையம் தை மாத ஆட்சிக்குழுவின் அனுமதியோடு தொடங்கப்பட்டதன் அடிப்படையில் அதன் செயற்பாடுகள் பலதரப்பட்டன. பொருளியல், சமூகவியல் பண்பாட்டியல், மானிடவியல், நாட்டாரியல், நுண்கலையியல், இலக்கணவியல், தமிழ்இலக்கியவியல் போன்ற துறைகளில் ஆய்வுகளை மேற்கொள்ளவிருக்கும் ஆய்வாளர்களக்கு பல வகையிலும் உதவும்முகமாக இது உருவாக்கப்பட்டது. இத்துறைகள் சார்ந்த பேராசிரியர்கள், தமிழ்ப்பட்டயச் சான்றிதழ் கற்கைநெறியின் விரிவுரையாளர்கள், தமிழ்ச்சங்க கல்விக்குழு உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்ட ஆய்வு மையமாக அமையும். இந்த ஆய்வு மையத்தின் செயலாளராக கல்விக்குழுச் செயலாளர் கடமைபுரிவார். இம்மையக் குழுவினர் ஒன்று கூடித் தலைவர், உபதலைவர் போன்றோரைத் தெரிவு செய்து இயங்கும். தேவையேற்படின் தலைவரின் அனுமதியுடன் பல உபகுழுக்களாகப் பிரிந்து ஆய்வு மையம் தொழிற்படும். இந்தத் தமிழியல் ஆய்வு மையத்தின் நோக்கம், இலக்கு செயல்முறையும் மேல் வருமாறு.

### நோக்கம் (Vission)

*01) தமிழியல் ஆய்வைத் தரநிலையில் மேம்படுத்தலும், உலகம் முழுவதும் நிகழும் தமிழியல் ஆய்வுகளை ஒன்றிணைத்தலும்*

*02) இலக்கு (Misison) செயல்முறையும்*

*i) உலகளாவிய முறையில் நிகழும் தரமான ஆய்வுகளைப் பட்டியற்படுத்தலும், பிரதான ஆய்வுச் சுருக்கங்களைத் தொகுத்தலும்*

*ii) தமிழியல் ஆய்வாளர்களின் பட்டியலொன்றைத் தொகுத்தல். பல்கலைக்கழகங்கள், தமிழ் ஆய்வு நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு இப்பணியை முன்னெடுத்தல்.*

*iii) தமிழியல் ஆய்வினை மேம்படுத்துவதற்கு ஆய்வுமுறையிலான கருத்தரங்கு களையும் மாநாடுகளையும் நடத்தல்.*


*iv) தமிழியல் ஆய்வுச் சஞ்சிகை ஒன்றை வெளியிடல். இச் சஞ்சிகை தனிநாயகம் அடிகளார் வெளியிட்ட "தமிழ்ப் பண்பாடு" என்ற தரத்தை ஒத்ததாக இருப்பதற்கு ஆவன செய்தல்.*

*v) தமிழியல் ஆய்வு செய்வோருக்கு மேற்பார்வையாளர்கள் வேண்டப்படுமிடத்து பொருத்தமான மேற்பார்வையாளர்களை ஒழுங்குபடுத்திக் கொடுத்தலும் இதனூடாக தமிழ்மொழி வளர்ச்சிக்குரிய கலைச் சொற்களை உருவாக்குதலும்.*

*vi) தமிழை அறிவியல் மொழியாக வளர்ப்பதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளல்.*

*vii) தமிழ்ப்பட்டயச் சான்றிதழ் கற்கைநெறியையும் இந்த அமைப்பிற்குள் கொண்டு வருதல்*

# முதுபெரும் புலவர், கலாபூஷணம், புலவர்மணி ஆசிரியர் வை.க.சிற்றம்பலம் அவர்கள்



**செ**ந்தமிழும், சீர்சைவமும் இரு கண்ணெனப் போற்றி வளர்த்த பேரறிஞர்களும், சைவச் சான்றோர்களும், சித்தர்களும், ஞானிகளும் வாழ்ந்த சீர் இணுவைத் திருவூரின் கண் அருளாளர் வைத்திலிங்கம் கந்தர் - ஆனந்திப்பிள்ளைக்கும் மகனாக 16.09.1914இல் சிற்றம்பலம் அவர்கள் பிறந்தார்.

*"தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார்*
*தோன்றலின் தோன்றாமை நன்று"*

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்குக்கு அமைய புகழுடன் தமது 99ஆவது அகவையில் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்.

"விளையும் பயிரை முளையில் தெரியும்" என்ற முதுமொழிக்கமைவாக, இவர் பிறந்து அறிவு தெரிந்த நாள் முதல் கலைத் தெய்வத்தின் மீது பக்தி நிரம்பப் பெற்றவராக இருந்தார். தமது ஆரம்பக் கல்வியை இணுவில் அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் மேற்கொண்டார். மூன்றாம் வகுப்பு வரை கல்வி கற்ற பின் கோண்டாவில் சைவ வித்தியாசாலையில் சேர்ந்து (1925 - 1930) எல்லா வகுப்புகளிலும் தேர்ச்சி பெற்று, அக்காலத்தில் உயர்ந்த வகுப்பாகிய ஒன்பதாம் (பிறிலிம்) வகுப்பில் சித்தியெய்தினார். பாடசாலைகளிலும் நடைபெறும் எழுத்து, பேச்சுப் போட்டிகளில் பங்குபற்றி முதல இடத்தைப் பெற்றுக் கொள்வார். ஆசிரியர்களுடைய அன்பையும் ஆசிகளையும் பெற்று

சிறந்த மாணவராக, சகலதுறை வல்லுனராகத் துலங்கி நன்மதிப்புடன் திகழ்ந்தார். 1930ஆம் ஆண்டு ஆரம்ப ஆசிரியராக இணுவில் சைவ மகாஜன வித்தியாசாலையில் இணைந்து குறைந்த வேதனத்துடன் சில காலம் ஆசிரியராகப் பணியாற்றினார். ஓய்வுநேரங்களில் இணுவைத் தவமுனிவர் வடிவேல் சுவாமிகளிடம் சென்று திரு முறைகளும் புராணபடலமும் பயின்று தமது சமய அறிவைப் பெருக்கிக்கொண்டார்.

1933 இல் இளைஞரான சிற்றம்பலத்துக்கு திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் ஆசிரிய பயிற்சி மாணவனாகக் கற்கும் வாய்ப்புக் கிட்டியது. சைவாசிரிய கலாசாலைப் பிரவேசம் சிற்றம்பலம் அவர்களுக்கு புதியஅறிவையும் அநுபவங்களையும் ஊட்டியது. கலாசாலை அதிபரின் ஆற்றல்மிக்கஆளுமை மற்றும் உபஅதிபரின் ஆழ்ந்த சிந்தனைப் புலம், விரிவுரையாற்றியோரின் விளக்கச் செறிவு ஆகியன அவரைப்புடம் போட்டதங்கமாக மிளிரச் செய்தன. ஆறுமுகநாவலர் பெருமானின் வழிநின்று சைவத்துக்கும் தமிழுக்கும் பெரும் பணியாற்றிய பண்டிமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களின் மாணாக்கராக இருந்து அவரின் வழிகாட்டலில் தமிழ் மொழியிலும் சைவசமயத்திலும் ஆற்றல் பெற்றவராகத் திகழ்ந்தார்.

*"வெள்ளத்து அனைய மலர் நீட்டம் மாந்தர்தம் உள்ளத்துஅனையது உயர்வு"*

நீரின் உயரம் உயர உயர மலரும் உயரும். அதேபோல் தமது ஊக்கத்தால் உயர்ந்து நிற்கும் மலராகநின்று மணம் பரப்புகின்றனர். இதையே ஔவையாரும் "நீரளவே ஆகுமாம் நீராம்பல்" என்று கூறியுள்ளார்.

1934ஆம் ஆண்டு ஆசிரியப் பயிற்சியை நிறைவுசெய்து கொண்டு வெளியேறிய சிற்றம்பலம் அவர்கள், ஆசிரியத் தொழிலைப் பெரும் பேறாக எண்ணி, 1935 தொடக்கம் 1970 வரை ஆசிரியராகவே இருந்து நல்மாணாக்கர் பரம்பரையை உருவாக்கி மகிழ்ந்தார். 1937இல் தென்னிந்திய தமிழ்ச்சங்கம் நடத்திய இளந்தமிழ்ப் புலவர் தேரிவில் சித்தியடைந்தார். 1939இல் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கம் நடத்திய பாலபண்டிதர் தேர்விலும் முன்னேற்றங்களைக் கண்ட சிற்றம்பலம் அவர்கள் ஆசிரிய சேவையில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். அதனால் சைவ வித்தியா விருத்திச் சங்க முகாமையின் கீழ் இயங்கிய சைவப் பாடசாலைகளில் ஆசிரியராகப் பணியாற்றும் வாய்ப்புக் கிடைக்கப் பெற்றது. 1943 தொடக்கம் 1946 வரை மதுரைப் பண்டிதர் பரீட்சை, வித்துவான் பரீட்சைக்கு ஆயத்தஞ் செய்து கொண்டிருந்த இறுதிக்காலம். அதாவது பரீட்சை நடைபெறவுள்ள கால கட்டத்தில் துணைவியார் காலமானதால் பரீட்சையில் தோற்ற முடியாமல் போயிற்று.

கவிபாடும் வல்லமை கொண்டு விளங்கிய இவர் 1945இல் யாழ்ப்பாணம் செங்குந்தா இந்துக் கல்லூரியின் அதிபராகச் சேவையாற்றி மாற்றலாகிச் சென்ற அ.த. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளைக்குப் பாடிய பிரிவுபசாரப் பாடலைத் தொடர்ந்து வாரந்தோறும் 'ஈழநாடு' பத்திரிகையில் பலவிதமரபுச் செய்யுள்களை எழுதி வந்தார். 1968 தொடக்கம் இலங்கை வானொலியிற் நற்சிந்தனைகளை வழங்கியும் வந்துள்ளார்.

ஆசிரியப் பணியிலிருந்து 1970இல் ஓய்வுபெற்ற சிற்றம்பலம் அவர்கள் ஓய்வு காலத்தைஎழுத்துப் பணிக்கு அர்ப்பணித்தார். தெய்வ சிந்தனையில் மனதைச் செலுத்தி, வணங்கும் தெய்வங்கள் மீது பாமாலைகளைப் புனைந்து, தாம் அவற்றைப் பலரும் உணர்ந்து கொள்ளும் வண்ணம் பல்வேறு சந்தர்ப்பங்களில் நூல்களாக வெளிக்கொணர்ந்தார்.

1986இல் அளவெட்டி 'கும்பழாவளைப் பிள்ளையார் நான்மணிமாலை' யை ஆலயத்திலேயே அரங்கேற்றம் செய்தார். தொடர்ந்து பல பிரபந்தங்கைளப் பாடி வரலானார். 1992இல் இவரால் எழுதுப்பட்ட 'விபுலானந்த நான்மணிமாலை' நூல் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் முதல் பரிசைப் பெற்றுக்கொண்டது. 1994இல் இலங்கையில் வெளிவந்த மரபுக்கவிதை நூல்களில் இவரால் இயற்றப்பட்ட 'நல்லூர் முருகன் இறைமணிமாலை' கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் முதல் பரிசினைப் பெற்றது. இந்த நூலின்அரங்கேற்றம் நல்லை ஆதீனத்தில் நடைபெற்றமை விசேட அம்சமாகும். இவ்வாறாக பல பிரபந்தங்களைப் பாடியவர் தம் குருநாதரான பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை மேல் 'பண்டிதமணி' என்னும் பிரபந்தத்தையும் பாடி தமது நன்றிக் கடனைச் செலுத்தியுள்ளார்.

2004ஆம் ஆண்டு லண்டன் ஸ்ரீ முருகன் கோயில் கும்பாபிஷேகஞ் சார்பாக பதினாறு சீர்கொண்ட பன்னிரண்டு விருத்தப்பாக்களைப் பாடி வழங்கினார். மேலும் 'இணுவில்பரராசசேகரப்பிள்ளையார் மணிமாலை' , 'இணுவில் சிவகாமிபிள்ளைத் தமிழ்', இணுவில்சிவகாமி அந்தாதி', ஈழத்துச் சிதம்பர திருப்பதிகம்', 'கீரிமலை நகுலேஸ்வர திருப்பதிகம்' என்பவை இவரால் பாடப்பட்ட முக்கிய பாடல்களில் சிலவாகும். 2009இல் 'கொக்குவில் சந்திரசேகரப் பிள்ளையார் மும்மணிமாலை' என்னும் நூலையும் வெளியிட்டு, பலரின் பாராட்டுக்களைப் பெற்றார்.

தமிழ், சமயத் தொண்டுகளுடன்பொதுப் பணிகளிலும் கால்பதித்து அவற்றைச் சிறப்புடன் செய்து வந்தார். துர்க்கா தேவஸ்தானத்தில் தொடர்ச்சியாக எட்டு வருடங்கள் பன்னிரு திருமுறைகளை ஓதி வந்து மெய்யடியார்களின் அன்புக்கப் பாத்திரமானவர். அளவெட்டி சைவ வாலிபர் சங்கத்தின் காரியதரிசியாகவும், தலைவராகவும் ஏறக்குறைய பத்து ஆண்டுகள் (1995 -1986) பணி புரிந்தார். மேலும் வடிவேற் சுவாமிகள், மகாதேவ

சுவாமிகள், யோகர் சுவாமிகள் ஆகியோருடன் 50 ஆண்டு காலத் தொடர்பினை ஏற்படுத்தியிருந்தமை அவருக்குக் கிடைத்த பேறாகவே கொள்ளலாம். தமது வாழ்க்கையை சமயத்தின் பால் திருப்பி ஆலயங்கள் தோறும் சென்று பஜனைகளைச் செய்துவந்தார். எல்லோராலும் மதிக்கப்பட்ட பெருமகனா, ஆரவாரமின்றி அமைதியாக வாழ்பவர் என்ற பண்புக்கு உரியவரானார்.

இவர் பாடிய பாடல்களைப் பின்வருமாறு வகுத்துத் தந்துள்ளார் அமரர் கலாபூஷணம், பண்டிதர் சி.அப்புத்துரை அவர்கள். ஒருபா ஒருபா - 4, மும்மணிமாலை - 2, திருஊஞ்சல் - 5, திருப்பதிகம் - 9, வருக்கமாலை - 1, திருவிரட்டை மணிமாலை- 4, திருப்பள்ளி எழுச்சி - 1, பிள்ளைத் தமிழ் - 3 என்ற சிற்றம்பலம் அவர்களின் படைப்புகள் பற்றி பதின்மூன்று பிரபந்தங்கள் என்ற தகவலையும் முன்வைத்துள்ளார்.

இணுவையூரின் மைந்தன் உலகறிந்த பெருங்கலைஞர் மகாவித்துவான் பிரம்மஸ்ரீ ந.வீரமணிஐயர் முதன்முதலாக 'கலாபூஷணம்' விருதைப் பெற்று ஊருக்குப் பெருமை சேர்த்துத் தந்தார். அவருக்கு அடுத்த 2002ஆம் ஆண்டு இலக்கியத் துறைக்காக புலவர்மணி வை.க.சிற்றம்பலம் அவர்கள் கலாபூஷணம் விருதினைப் பெற்றுக் கொண்டார். எழுத்துப் பணியில் தம்மை ஈடுபடுத்தி சைவமும் தமிழும் வளர்க்க அரும்பாடுபட்டு சேவையாற்றும் பெரியாரின் மூன்று மகன்மாரும் ஆசிரியப் பணியுடன் இசைத்தொண்டும் புரிந்துவருகின்றனர். அவர்களில் ஒருவராகிய சிவானந்தராசா அவர்கள் 2012ஆம் ஆண்டுக்கான கலாபூணம் விருதினை இசைத் துறைக்காகப் பெற்று பெருமை சேர்த்துள்ளார்.

*"ஒவ்வது அறிவது அறிந்து அதன் கண்தங்கிச் செல்வார்க்குச் செல்லாதது இல்"*

தம்மால் எவ்வளவு முடியம் எனபதை அறிந்து அதன் கண் மனம், மொழி மெய்களை ஒருங்குவித்து ஆராய்ந்து செயல்படுவார்க்கு வெற்றி பெற இயலாதது எதுவுமில்லை. சிற்றம்பலம் அவர்கள் வெற்றி மேல் வெற்றி பெற்று அறிவுக் களஞ்சியமாகத் திகழ்கின்றார்.

நன்றி: இணுவில் ஒலி

**முதுபெரும் புலவர் வை.க. சிற்றம்பலம அவர்களின் தமிழ்த்தொண்டைப் பாராட்டி கொழும்புத்தமிழ்ச் சங்கம் தமிழ்நிதி என்னும் பட்டமளித்துக் கௌரவம் செய்கின்றது.**

செந்தமிழைக் கற்றாய்ந்து தெளிந்து மற்றோர்
தமிழ்கற்றே ஆய்ந்தறியத் தமிழை ஈந்து
புத்திமிகு சமுதாயம் ஒன்றைத் தம்பால்
தோற்றுவித்த பெருமகனாம் **வை.க.சி** ஐயா
சந்ததமுந் தமிழேதன் மூச்சாய்க் கொண்டோன்
தொன்மைத்தமிழ் இலக்கியங்கள் தேர்ந்த மேதை
இந்துக்கடல் சூழிலங்கைத் திருநாட் டோரின்
இணையில்லாப் பெரும்பேறே இவண்ணு தித்தார்.

கடலுண்ட குறுமுனியின் தோற்றம் ஐயன்
கடலொக்குந் தமிழுண்ட தேற்றத் தாலோ!
திடங்கொண்டே உடல்நூறு அகவை தாண்டித்
தொடர்கிறது தமிழ்த்தாத்தா தமிழ்த்தாய் பக்தன்
நெடுவானின் பரப்பறிவு ஆழம் ஆழி
நிகராக மற்றொருவர் இல்லா உச்சம்
கொடையன்றோ ஈழத்தமிழ்ச் சான்றாண் மைக்குக்
கரங்கொடுத்த மூதறிஞர் ஞானப் பேழை.

கவிப்புலமை கடவுள்வரம் கற்றோ ரெல்லாம்
கவிபுனையும் கைப்பாகங் கொண்டா ரில்லை
கவிப்புனைவில் கோன்:யாப்பைக் கரைத்தே யுண்ட
கவிஞர்: ஐயா கறைகாணின் பொறுக்கா நெஞ்சர்
புவிப்பரப்பில் கோலோச்சும் தமிழ்த்தாய் மார்பில்
பாமாலை கோத்தணிந்து பெருமை கொண்ட
தவப்புதல்வன் **வை.க.சி** செஞ்சொல் லாண்டு
தருமத்தைப் போதித்த சான்றோன் வாழி!

தமிழோடு கலாசாரப் பண்பா டூன்றித்
தளைத்தோங்கத் தலைநகரில் தசாப்தம் ஏழு
தமிழான்றோர் தொடக்கிவளர்த் திட்ட சங்கம்
தமிழ்ச்சங்கம் **தமிழ்நிதி** யென் நாமஞ் சூட்டி
எமதிழப் பெருநிதியாம் ஐயன் றம்மின்
இணையில்லாத் தமிழ்த்தொண்டை நன்றி யோடு
அவைகூட்டி வாழ்த்துரைத்தே அறிஞர் கையால்
அளிக்கின்றோம் உயர்விருதொன் றறிவின் பேறே!

பாவாக்கம் : -
காப்பியக்கோ **ஜின்னாஹ் ஷரிபுத்தீன்**
பொதுச்செயலாளர் - கொழும்புத் தமிழ்ச் சங்கம்

# பாடப்பரப்பு

பாடம் 1

**அடிப்படைத் தமிழ் இலக்கணம்**

1. எழுத்திலக்கணம்
2. புணர்ச்சி
3. சொல்லிலக்கணம்
4. தொடர் இலக்கணம்
5. யாப்பிலக்கணம்
6. அணியிலக்கணம்

**துணை நூல்கள்**

நாவலர் இலக்கணச் சுருக்கம்

நன்னூல் காண்டிகையுரை

இலக்கண விளக்கம் - பண்டிதர் வீரகத்தி

அடிப்படைத் தமிழ் இலக்கணம் - எம்.ஏ.நுஃமான்

பாடம் - 2

**i. தொடர்பாடல் அடிப்படைகள்**

வழுவற எழுதலும் பேசலும்

1. கடிதம் எழுதும் முறை
2. அழைப்பிதழ்கள் எழுதும் முறை
3. அறிக்கைகள் எழுதும் முறை
4. விளம்பரங்கள் எழுதும் முறை
5. செய்தி எழுதும் முறை
6. கட்டுரை ஆக்கம்
7. பொது அவைத் தொடர்பாடல்கள்

பாடம் 3

**ii. பழந்தமிழ் இலக்கியங்கள்**

1. சங்க இலக்கியங்களும் இலக்கிய மரபும்
2. தேர்ந்தெடுத்த அகப்பாடல்கள் 10
3. தேர்ந்தெடுத்த புறப்பாடல்கள் 10
4. நெடும்பாடல் - முல்லைப்பாட்டு
5. தேர்ந்தெடுத்த திருக்குறள் அதிகாரங்கள்

   அறத்துப்பால் 5 *(பயனில சொல்லாமை - புகழ்)*

   பொருட்பால் 5 *(உழவு - கயமை)*

   காமத்துப்பால் 5 *(பிரிவாற்றாமை - தனிப்படர் மிகுதி)*
6. சிலப்பதிகாரம் - வழக்குரைகாதை

பாடம் 4

## iii. இடைக்காலத் தமிழ் இலக்கியங்கள்

1. இடைக்காலத் தமிழ் இலக்கிய வரலாறு - சுருக்க அறிமுகம்
2. பக்தி இலக்கியம்

   அ. சுந்தரர் தேவாரம்

   ஆ. மாணிக்கவாசகர் - நீத்தல் விண்ணப்பம்

   இ. ஆண்டாள் - திருப்பாவை
3. சிற்றிலக்கியம் - திருக்கைலாயஞானஉலா. முத்தொள்ளாயிரம்
4. கம்பராமாயணம் - கிட்கிந்தைப் படலம்
5. வில்லிபாரதம் - திரௌபதி மாலையிட்ட சுருக்கம்
6. முகியித்தீன் புராணம் - முவீது பெற்ற படலம்
7. இரட்சணிய யாத்திரிகம் - கடைதிறப்புப் படலம்

பாடம் 5

## V. நவீன தமிழ் இலக்கியம்

1. நவீன தமிழ் இலக்கிய அறிமுகம்
2. கவிதை - பாரதி பாடல்

   பிச்சமூர்த்தி கவிதை

   மகாகவி கவிதைகள்

   *(தேர்ந்தெடுத்த சில கவிதைகள்)*
3. சிறுகதை - புதுமைப்பித்தன் கதைகள்

   இலங்கையர்கோன் கதைகள் தேந்தெடுத்த சில கதைகள்
4. நாவல் - சுந்தரராமசாமி - ஒரு புளிய மரத்தின் கதை

   கோகிலம் சுப்பையா - தூரத்துப் பச்சை
5. புனைகதை சாரா எழுத்தாக்கங்கள்
6. நவீன இலக்கிய / திறனாய்வுக் கோட்பாடுகள்

பாடம் 6

## VI. சிறிய அளவிலான ஓர் ஆய்வறிக்கை.

மாணவர்கள் தங்கள் பாடவிதானத்துக்கு அமைவான ஒரு தலையங்கத்தைத் தேர்ந்து ஏறக்குறைய 75 முதல் 100 பக்கங்களுக்கு அமையக் கூடியதான ஓர் ஆய்வறிக்கை சமர்ப்பித்தல் *(பக்கம் A4 அளவு - 12 எழுத்துருவில் இரட்டை இடைவெளியில் அமைய வேண்டும்.)*

நேரசூசி

***சனிக்கிழமை பி.ப. 4.00 மணி தொடக்கம் 7.00 மணி வரை***

***ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.00 - 12.00 - பி.ப 4.00 - 7.00***

# தமிழில் பட்டயச் சான்றிதழ் கற்கைநெறி விரிவுரையாளர்கள்



பேரா.சபா.ஜெயராசா
*(புலமைக்குழுத் தலைவர்)*



பேரா.சோ.சந்திரசேகரம்
*(புலமைக்குழு உபதலைவர்)*



சைவப்புலவர்
சு.செல்லத்துரை
*(புலமைக்குழுச் செயலாளர்)*



பேரா.செ.யோகராசா
*(மொழித்துறை கிழக்குப் பல்கலைக்கழகம்)*



பேரா.வ.மகேஸ்வரன்
*(தலைவர்- தமிழ்த்துறை பேராதனைப் பல்கலைக்கழகம்)*



திரு.க.இரகுபரன்
*(சிரேஷ்ட விரிவுரையாளர் - தென்கிழக்குப் பல்கலைக்கழகம்)*



காப்பியக்கோ
ஜின்னாஹ் ஷரிபுத்தீன்
*(செயலாளர் - கொ.தமிழ்ச் சங்கம்)*



திரு.சோ.முரளி
*(அதிபர்.தெஹிவளை தமிழ் வித்தியாலயம்)*

திருமதி.வானதி காண்டீபன்
*(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி தேசிய கல்வி நிறுவகம் மகரகம)*



திரு.துணவியூர் கேசவன்
*(ஆசிரியர் இந்துக் கல்லூரி இரத்மலானை)*



திரு.தெ.மதுசூதனன
*(ஆசிரியர். சமகாலம்)*

# தமிழில் பட்டயச் சான்றிதழ் கற்கைநெறி பட்டம் பெறுவோர்



திரு.சாமித்தம்பி பொன்னுத்துரை



திருமதி. இந்திராணி பொன்னுத்துரை



திருமதி. அழகேஸ்வரி தியாகராஜா



திருமதி. அன்னபூர்ணம் பேரின்பராஜா



திருமதி.பத்மாவதி தங்கராஜா



செல்வி. குழந்தைவேலு பரிதா



செல்வி. உவர்ணா திருநாவுக்கரசு



செல்வி. பங்கிராஸ் பிரசாந்தினி

## தமிழில் பட்டயச் சான்றிதழ் கற்கைநெறி பட்டம் பெறுவோர்



செல்வி. கிரிஷா முருகானந்த



செல்வி. ச.சர்வலோகேஸ்வரி



செல்வி. சிந்துஜா
அரியபுத்திரன்



திருமதி. சரோஜினிதேவி
மார்க்கண்டு



செல்வி. ராஜசுலோசுஷன்
ஹூசானி



திருமதி தவபாக்கியம்
அமிர்தலிங்கம்

## சங்க கீதம்

வாழியஎம் தமிழ்ச்சங்கம் வளர்ந்தெழுக தமிழ்மொழியே
ஆழிசூழும் இலங்கைதனில் அழகுதுறை நகர்கொழும்பில்
ஏழிசை போல் தமிழ்மொழியும் இசைகொண்டு வாழியவே
இயலிசைநா டகமோடின் கலைபலவும் இசைந்தொலிக்க

அழகொழுகும் வனப்புகளும் இளமையொடு இனிமைதரப்
பழகுதமிழ் பயின்றமுதம் பொழிந்துநிதம் பொலிந்திடவே
பல்லோரும் பணியாற்றப் பரிந்தேற்றி வளம்பாய்ச்சித்
தொல்லுலகில் புகழ்மணக்கத் தொழுதேத்தும் தமிழணங்கே

முச்சங்க முழுப்பணியை முழுவுலகும் முழங்கவைக்கும்
எம்சங்கம் தமிழ்ச் சங்கம் என்றென்றும் வாழியவே
சங்கொடுதாமரைஏடும் சிறந்திடுமெம் இலச்சினையே
மங்கலநல் அறிவாய்மெய்ப் பொருள்கண்டு வளருதியே

கவியாக்கம்
பன்மொழிப்புலவர் த.கனகரத்தினம்

K. Loganathan

Pu

x K. லோகநாதன் சிவண்ணியா

Noth punduloya

uppor Divisi on

punduloya.

x K Loganathan sivaniya

noth punduloya

uppor Division

punduloya

1991 |10|1 பிரியா
தேரா ~~சங்கா~~

கே. யோகநாதன் } 9|6|2015
சிவனியா 1992

(புஷ்பலதா)
4 (3 [illegible] = 05)

05 |07|2015 கிரிதரன்

வடக்கு [illegible]
[illegible]


COLOMBO TAMIL SANGAM ESTD. 1942